DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 132/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : நாராயணசாமி | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.07.2025..

**முதல் விசாரணை**

1. நான் உடுமலை எலையமுத்தூர் பிரிவில் வசித்து வருகிறேன். தளி ஜல்லிபட்டியில் எம் எஸ் கேட்டரிங் பெயரில் சமையல் தொழில்செய்து வருகிறேன். எனக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். 2 மகள்களுக்குப திருமணம் ஆகிவிட்டது. நானும் என் மனைவியும் தான் குடியிருந்து வருகிறோம். கடந்த 16.02.2025 ம் தேதி 3.30 மணிக்கு ஜல்லிப்பட்டிக்கு கேட்டரிங்க சென்டருக்கு நானும் என் மனைவியும் சென்றபோது வீட்டை பூட்டிவிட்டு சென்றோம். அங்கு சென்று ஒரு நாள் இ ரவு அங்கிருந்து காலையில் டிபன் மதியம் சாப்பாடு தயார் செய்து உடுமலைப்பேட்டைக்குஅனுப்பிவிட்டு 17.02.2025 ம் தேதி மதியம் 3.30 மணியளவில் நாங்கள வீட்டிற்கு வந்தோம் முன்பக்கமாக வடக்கு பார்த்த கேட்டை திறந்து பார்த்த போது எங்கள் வீட்டின் மெயின் டோர் மற்றும் கைப்பிடி உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்று முதலில் பெட்ரும் சென்று பார்த்தோம். ஸ்டில் பீரோ –1 மர பீரோ –1 திறந்து இருந்தது. துணிகள் கலைத்து இருந்தது. பின்னர் பார்த்த போது இரும்பு பீரோவில் 3 பவுன் நெக்லஸ்– 1, ½ பவுன் காயின்–1, தாலி காசு–2 ,தாலி குண்டு–2,

மூக்குத்தி 3 எண்ணிக்கை ¼ பவுன் இருந்தது மொத்தமாக 4 ¾ பவுன் தங்க நகையும் பணம் ரூ.40000/- காணவில்லை. உடனே காவல் நிலையம் சென்று நானும் என் மனைவியும்புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும்புகார் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **புகார் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் அங்கு வந்து விசாரித்தார்கள். வழக்கு போட்டார்கள். பின்னர் களவு போன நகை 4 ¾ பவுன் நகையை கனம் நீதிமன்றத்தின் மூலமாக மனு தாக்கல் செய்து பெற்று கொண்டேன். இன்றைய தினம் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். **தங்க நெக்லஸ்-1 அசா.பொ.1 என்றும், ½ பவுன் காயின் -1 அசா.பொ.2 என்றும், தாலி காசு -2 எண்ணிக்கை அசா.பொ.3 என்றும், தாலி குண்டு - 2 எண்ணிக்கை அசா.பொ.4 என்றும், மூக்குத்தி 3 எண்ணிக்கை அசா.பொ.5** என்றும் குறியீடு செய்யப்படுகிறது. நகைகள் குறியீடு செய்யப்பட்ட பிறகு மீண்டும் சாட்சியிம் ஒப்படைக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதுவரைபடித்துள்ளிர்கள் எனறால படிக்கவில்லை. கையெழுத்து போட்ட புகாரில் உள்ள சங்கதிகள் நீங்கள் எழுதவில்லை என்றால் சபரி எனது சின்ன மாப்பிள்ளை எழுதினார். காவல் நிலையத்திற்கு போகும போது புகார் எழுதி கொண்டு போகவில்லை என்றால் வீட்டில் எழுதி கொண்டு போயிருந்தோம். சம்பவம் பற்றி உடனடியாக காவல் நிலையத்திற்கு புகார்கொடுக்க வில்லை என்றால் 3.30 மணிக்கு வந்தோம். பார்த்த பின் 5.00 மணிக்கு. சபரி எழுதி நான் படித்து கையெழுத்து போட்டதாக புகாரில் இல்லை என்றால் ஆமாம்.

2. உங்கள்வீட்டின் அருகில் வீடுகள் உள்ளது என்றால் ஆமாம். வீடுள்ள ஏரியாவை சுற்றி முள் வேலிகள் உள்ளது என்றால் இருபுறமும் வேலி உள்ளது. புகார் கொடுக்க போகும் போது எவ்வளவு நேரம் காவல் நிலையத்தில் இருந்திர்கள் என்றால்1/2 மணிநேரம். புகார் கொடுத்த தேதியில் போலிசார் வரவில்லை என்றால் அன்றைய தினம் வந்தார்கள். சாட்சி பட்டியலில் உள்ள குமுதவள்ளி உங்கள் மனைவி என்றாலும் காயத்ரி மற்றும் சங்கீதா உங்கள் மகள் என்றாலும் சரிதான். சின்ன துரை பக்கத்து வீட்டுக்காரர் மாணிக்காராஜ் 2 வீடு தள்ளி உள்ளார் என்றால் சரிதான். கார்த்தி மற்றும முகமது சபிர் ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது.

3. போலிசார் வந்து பொருளை கைப்பற்றினார்களா என்றால் உடைந்த பூட்டை கை ப்பற்றவில்லை. பீரோ உடைக்கப்படவில்லை என்றால் ஆமாம். வெளியூர் சமையல் வேலைக்கு போன விவரம் அக்கம் பக்கம் வீட்டுகாரர்களுக்கு தெரியும் என்றால் ஆமாம். புகாரில் நகையில் மாடல்

பற்றிய விவரம் சொல்லவில்லை என்றால் நெக்லஸ் காயின் என்றுசொல்லியுள்ளேன். நகைகளை வாங்கி எவ்வளவு நாள் இருக்கும் என்றால சுமாராக 5 வருடம் இருக்கும். நகைகளை வாங்கிய பில்களை ஒப்படைத்துள்ளிர்களா என்றால் இல்லை. தாலி காசு தாலி குண்டு போன்றவற்றை வீட்டில் வாங்கி வைக்கமாட்டர்கள் என்றால் பெரிய மகளுடையது கழட்டி வைத்திருந்தார். அவ்வாறு கழட்டி வைக்கமாட்டார்கள் என்றால் புதியது அதனால் வைத்து விட்டு சென்றார். புகாரில் சொன்ன நகைகள் இவ்வழக்கு சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் சம்பந்தப்பட்ட நபர் என்று சொல்லியுள்ள நிலையில் யார் வந்தார்கள் என்றால் பெயர் தெரியாது, என்ன பதவி நிலை என்றால காான்ஸ்டபிள் மற்றும் SI வந்தார்கள். சொன்ன நேரத்தில் சொன்ன மாதிரி போலிசார் வரவில்லை என்றாலும் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றால சரியல்ல. காணாமல் போன பணம் கிடைக்கவில்லை என்றால் சரிதான். புகாரிலும் போலிசார் விசாரணையிலும் பணத்தின் டிமானிநேசன் மற்றும் என்ன முறையில் வந்ததது என்று சொல்லவில்லை என்றால் சரிதான், 500 ரூபாய் நோட்டுகள்.

**மறுவிசாரணை** இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 132/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2<br>Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | குமுதவள்ளி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | மணி | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.07.2025..

**<u>முதல் விசாரணை</u>**

நான் உடுமலை எலையமுத்தூர் பிரிவு ஆர்ட்ஸ் காலேஜ் ரோட்டில் வசித்து வருகிறேன். நானும் என் கணவரும் சேர்ந்து எம் எஸ் கேட்டரிங் என்ற பெயரில் தளி ஜல்லிப்பட்டியில் சமையல் வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது கணவர் ஆவார். எனக்கு 2 மகள்கள் . அவர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது ஒரு மகள் போடிப்பட்டியிலும் ஒரு மகள் ஜல்லிப்பட்டியிலும் உள்ளார். கடந்த 16.02.2025 ம் தேதி 7.00 மணிக்கு நானும் என் கணவரும் ஜல்லிபட்டி கேட்டரிங் வேலைக்காக வேலை செய்து வந்தோம். பின்னர் 17.02.2025 ம் தேதி 3.30 மணிக்கு எங்கள் வீட்டிற்கு நானும் என் கணவரும் வந்தோம். வெளி கேட் பூட்டியிருந்தது. பூட்டை திறந்து விட்டிற்குள் சென்றபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டிருந்தது. வீட்டின் தென் மேற்கு மூலையில் உள்ள பெட்ரூம் சென்று பார்த்தேன். பார்த்த போது பெட்ரூமில் ஒரு மர பீரோ ஸ்டில்பீரோ திறந்திருந்தது. பீரோ சாவி பீரோவின் மேல் வைத்திருந்தோம்.

அந்த சாவியை எடுத்துபீரோவை திறந்துள்ளனர். இரும்பு பீரோவில் இருந்த நெக்லஸ் 3 பவுன், அ1/2 பவுன் தங்க காயின்–1 தாலி காசு –2 தாலி குண்டு– 2, மூக்குத்தி 3 எண்ணிக்கை ¼ பவுன் மொத்தம் 4 ¾ பவுன் நகையும் பணம் ரூ.40000/– பணமும் திருடு போயிருந்தது. காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் வந்து விசாரித்தார்கள். கண்டுபிடித்து தருவதாக சொன்னார்கள். 1 ½ மாதம் கழித்து போலிசார் கண்டுபிடித்து கொடுத்தனர். யார் திருடினார்கள் என்ற விவரத்தை தெரிந்து கொள்ளவில்லை. என் கணவரும் மருமகனும் வந்து மேற்படி சொத்துக்களை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்று கொண்டோம்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு செலலவில்லை என்றால் நானன் போகவில்லை என் கணவரும் மருமகனும் சென்றார்கள். காணாமல் போன நகை வாங்கி எத்தனை வருடம் இருக்கும் எனறால் 10–20 வருடம் இருக்கும். கணவர் நீதிமன்றத்தில் வாங்கிய நகை புதிய நகை மாதிரி உள்ளது என்றால் பயன்படுத்தாமல் இருப்பதால் புதியதாக உள்ளது, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும் காயின் புதியதாக உள்ளது என்றாலும் நெக்லஸ் மட்டும் வாங்கி 20 வருடம் ஆகிறது, மற்றவைகள் இப்போது வாங்கியது.

2. காயின் 3 மாதங்களுக்கு முன் வாங்கப்பட்டது போல் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில இருந்து வாங்கிய நகை வழக்கு சொத்துகள் இல்லை என்றால் சரியல்ல. உங்களை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். அக்கம் பக்கத்தில் வீடுகள் நிறைய உள்ளது என்றால் ஆமாம். சமையல் வேலைக்கு போகும போது அக்கம பக்கம் மற்றும் உறவினர்களுக்கு சொல்விர்கள் என்றால்இல்லை. போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்கவும் கணவருக்காக பொய்யாக சாடசியம்அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

**<u>அரசுதரப்பில் மறு விசாரணை</u>**

1. காயின் எந்த 3 மாதத்திற்கு முன்பு வாங்கப்பட்டது என்றால் ஜனவரி மாதம் வாங்கப்பட்டது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காயின் ஜனவரி மாதத்தில் வாங்கிய காயினுக்கு பில் இருக்கும என்றாலும் நீதிமன்றத்தில் ஒப்படைக்க இயலும் என்றாலும் வீட்டில் பில் இருக்கும் பார்க்கவேண்டும். பேரக்குழந்தை பிறந்ததற்கு பரிசாக வந்தது அதனால் பில் இல்லை.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 132/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சின்னதுரை | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சுப்பிரமணியன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 14.07.2025..

**முதல் விசாரணை**

நான் உடுமலைப்பேட்டை எலையமுத்தூர் பிரிவில் TMS லேஅவுட்டில் வசித்து வருகிறேன். நான் வாளவாடி கால்நடை துறையில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அசா.1 பக்கத்து சைடு வீட்டுகாரர். கடந்த 17.02.2025 ம் தேதி பணியில் இருந்து வீட்டிற்கு வந்த போது அசா.1 மணியின் வீட்டில் திருடு போயிருந்தது. அங்கு போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். அங்கு DSP இ ருந்தார். SI ரேங்கில் விசாரித்து கொண்டிருந்தார். SI மேப் மற்றும வரைபடம் வரைந்து இடங்களை பற்றி கேட்டார். அருகில் இருந்ததற்கு சொல்ல தெரியவில்லை. நான் தான் அருகில் உள்ள வீடு விவரங்களை பக்கத்தில் உள்ள தோப்பின் விவரங்களை சொன்னேன். போலிசார் அதை குறித்து தனியாக 1 ½ பக்கம் அளவில் எழுதி கையொப்பம் பெற்று கொண்டார்கள் . நான் விவரங்களை தெரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அசா.1 மணி என்பவரின் எதிர்வீட்டில் குடியிருந்து வருகிறிர்கள்

என்றால் சரிதான். அசா.1 மற்றும் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றாலும் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. பார்வை மகசரில் உங்கள் சாட்சி கையெழுத்து இல்லை என்றால் சரிதான், ஆனால் நான் கையெழுத்து போட்டேன். சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.